பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 பங்குனி 21 சனிக்கிழமை 03.04.2021 கதிர் 17

## பொலிஸாரின் விரலைக் கடித்த இளைஞர் ஒருவர் யாழில் கைது

யாழ்ப்பாணத்தில் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரின் கை விரலைக் கடித்து, காயப்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவரை யாழ்.பொலிஸார் கைது செய்துள்ளனர்.

யாழ். ஆரியகுளம் சந்தியில் அமைந்துள்ள நாக விகாரையில் இரவுக் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸாருக்கும் அங்கு

2

# தமிழ் மக்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்கும் பொறிமுறையை முன்னெடுத்தே ஆக வேண்டும்

### அரசிடம் ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார எம்.பி. வலியுறுத்து



இறுதிப் போரில் இடம்பெற்றனவாகக் கூறப்படும் போர்க்குற்றங்களைக் கண்டறியவும், காணாமல் ஆக்கப்பட்ட தமிழர்களுக்கு என்ன நடந்தது என்பது தொடர்பிலும் ஆராய்ந்து தமிழ் மக்களுக்கு நீதியைபெற்றுக்கொடுக்கும்பொறிமுறையை இலங்கை அரசு முன்னெடுத்தே ஆக வேண்டும்.

- இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பு ஊடகம்

2

### கொரோனாவைக் காரணம் காட்டி பூட்டப்பட்டுள்ள

# யாழ். நகர வர்த்தக நிலையங்களை உடன் திறக்க ஆவன செய்யுங்கள்!

### மாவட்ட அரச அதிபரிடம் வர்த்தக சங்கம் வேண்டுகோள்



**(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)**

**யாழ்ப்பாணம், ஏப்ரல் 03**

**கொரோனா வைரஸ் தொற்றைக் காரணம் காட்டி தடைசெய்யப்பட்டுள்ள யாழ். நகர வர்த்தக நிலையங்களை உடன் திறக்க ஆவன செய்யுமாறு யாழ். மாவட்ட கொரோனாத் தடுப்புச் செயலணியின் தலைவரும் மாவட்ட அரச அதிபருமான க.மகேசனிடம் யாழ்ப்பாணம் வர்த்தகசங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.**

2

### ஈஸ்டர் தினத்தை முன்னிட்டு

## நாட்டில் உச்சக்கட்டப் பாதுகாப்பு 12 ஆயிரம் படையினர் களத்தில்



உயிர்த்த ஞாயிறு தினத்தை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கையில் உள்ள அனைத்து தேவாலயங்களினதும் பாதுகாப்புக்காக 12 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொலிஸ் அதிகாரிகள் மற்றும் முப்படையினர் நிறுத்தப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் பேச்சாளரும் பிரதிப் பொலிஸ்மா அதிபருமான

2

## பல ஆயிரக்கணக்கான மக்கள் ஆயரின் பூதவுடலுக்கு அஞ்சலி

மன்னார் மறைமாவட்ட ஓய்வு நிலை ஆயர் கலாநிதி இராயப்பு ஜோசப் ஆண்டகையின் திருவுடல் மக்களின் அஞ்சலிக்காக மன்னார் ஆயர் இல்லத்தின் சிற்றாலயத்தில் வைக்கப்பட்டுள்ள நிலையில் இன்று ஆயிரக்கணக்கான மக்கள் மற்றும் அரசியல் பிரமுகர்கள் சென்று அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

ஆயரின் திருவுடல் நேற்று யாழ்ப்பாணத்தில் இருந்து பேரணியாக மன்னார் ஆயர் இல்லத்துக்கு எடுத்துவரப்பட்டது.

திருவுடலுக்கு நேற்றுப் பிற்பகல்

2



## வலிகாமம் கிழக்கில் கல்லூரியின் பெயரில் பணம் கறக்கும் ஆசாமிகள்

**(எஸ்.நிதர்ஷன்)**

புத்தூர், சிறுப்பிட்டி, ஆவரங்கால் மற்றும் அச்சுவேலி பிரதேசங்களில் புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரியில் கல்வி பயிலும் வறிய மற்றும் அங்கவீனமான மாண வர்களுக்கான உதவி என்ற பெயரில் பணம் சேகரிக்கும் நடவடிக்கையில் சில ஆசாமிகள் ஈடுபட்டுள்ளனர்.

மேலும், சில இடங்களில் கல்லூரியின் பெயரில் நவீல் பாடசாலை போன்ற சில அமைப்புக்களுக்கு நன்கொடை சேகரிக்கின்றோம் என்ற ரீதியிலும் அவர்கள் பணம் சேகரிக்கும் நடவடிக்கையிலும் ஈடுபட்டுள்ளனர்.

2

## பிரதேச சபை உறுப்பினர் மீது தாக்குதல் நடத்திய மூவர் கைது



யாழ்ப்பாணம், நாவற்குழிப் பகுதியில் சாவகச்சேரி பிரதேச சபையின் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர் இராமநாதன் யோகேஸ்வரனைக் கத்தியால் வெட்டியும் கற்களால் தாக்கியும் தலையில் படுகாயங்களை ஏற்படுத்தியமை தொடர்பில் மூன்று சந்தேகநபர்கள் இன்று

2

## தேசத் துரோகிகளை அடையாளம் காட்டியுள்ளது ஜெனிவா தீர்மானம்

### இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க சுட்டிக்காட்டு



இலங்கை மீதான ஐ.நா.தீர்மான வாக்கெடுப்பு முடிவுகள் தாய் நாட்டை உண்மையாக நேசிப்பவர்களையும், பணம் மற்றும் அதிகாரத்துக்காகத் தாய் நாட்டைக் காட்டிக் கொடுக்கத் தயாராக உள்ளவர்களையும் தெளிவாக அடையாளம் காட்டியுள்ளது.

2

### கொரோனா வைரஸ் தொற்றையடுத்து

## 400 மாணவர்களுடன் யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாக பெண்கள் விடுதி முடக்கம்

**(வவுனியா நிருபர்)**

யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாகத்தின் பெண்கள் விடுதி தற்காலிகமாக முடக்கப்பட்டுள்ளது.

வவுனியா வளாகத்தில் கல்வி கற்கும் கண்டியைச் சேர்ந்த மாணவி ஒருவருக்குக் கொரோனா வைரஸ் தொற்று நேற்று உறுதி செய்யப்பட்டிருந்தது.

விடுமுறையில் சென்ற அவர் மீண்டும் பல்கலைக்கழகம் திரும்பிய நிலையில் தனிமைப்படுத்தலிற்குள்ளாக்கப்பட்டிருந்தார்.

அவருக்கு முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில், குறித்த

2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பல ஆயிரக்கணக்கான மக்கள் ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

2.45 மணி முதல் மக்கள் சென்று இறுதி அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

இந்தநிலையில், இன்று பல ஆயிரக்கணக்கான மக்கள் இன, மதம் இன்றி ஆயருக்கு கண்ணீர்மல்க அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

மேலும், முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், உள்ளூராட்சி சபைகளின் தவிசாளர்கள், உறுப்பினர்கள் என அரசியல் பிரமுகர்களும் இன்று அஞ்சலி செலுத்தினர்.

ஆயரின் திருவுடலுக்கு அரச அதிகாரிகள், அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள் உட்பட நாட்டின் பல இடங்களிலிருந்தும் பொதுமக்களும் இணைந்து அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

நாளை மாலை 3 மணியளவில் ஆயிரின் திருவுடல் மன்னார் ஆயர் இல்லத்தில் இருந்து பவனியாக மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

திருவுடல் நாளைமறுதினம் திங்கட்கிழமை மதியம் 2 மணி வரை பேராலயத்தில் அஞ்சலிக்காக வைக்கப்படும்.

திங்கட்கிழமை மாலை 3 மணியளவில் பேராலயத்தில் இறுதி திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். இலங்கையின் அனைத்து ஆயர்களும் இணைந்து கூட்டுத் திருப்பலியை ஒப்புக்கொடுப்பார்கள்.

அதனைத் தொடர்ந்து திருவுடல் பேராலயத்தில் அடக்கம் செய்யப்படவுள்ளது.

## பிரதேச சபை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டதன் பின்னர் சந்தேகநபர்களை நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சாவகச்சேரி பொலிஸார் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## வலிகாமம் கிழக்கில் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு பணம் சேகரிக்க எவருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை என்றும், அவ்வாறு பணம் சேகரிப்போருக்கும் எமது கல்லூரிக்கும் அல்லது கல்லூரியில் இயங்கும் பழைய மாணவர் சங்கம் போன்ற எந்த அமைப்புக்கும் தொடர்புமில்லை என்றும் கல்லூரி அதிபர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து பொதுமக்கள் மிகவும் அவதானமாக இருக்குமாறும், இவ்வாறு பணம் சேகரிப்பவர்களின் விவரம் தெரிந்தால் அது குறித்து கல்லூரி அதிபரிடமோ அல்லது அருகிலுள்ள பொலிஸ் நிலையத்திலோ முறையிடுமாறும் கல்லூரி அதிபர் கேட்டுக்கொண்டுள்ளார்.

## தேசத் துரோகி ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

- இவ்வாறு இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜெனிவா விவகாரத்தில் தாய் நாட்டின் நலனுக்கு முன்னுரிமை வழங்கிய குழுவினரையும், பணம் மற்றும் அதிகாரத்துக்காக நாட்டை அழிவுக்கு இட்டுச் செல்லத் தயாராகவுள்ள குழுவினரையும் நாம் அடையாளம் கண்டுகொண்டோம்.

ஐ.நா. தீர்மானம் நிறைவேற்றப்பட்டு இருந்தாலும், இலங்கை மீது பொருளாதாரத் தடைகள் விதிப்பதற்குரிய சாத்தியங்கள் இல்லை.

ஐ.நா. மனித உரிமைகள் சபையைப் பயன்படுத்திசிலபிரிவினர் இலங்கையை இழிவுபடுத்த முயற்சிக்கின்றனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் எதிர்க்கட்சிகள் நாட்டை இழிவுபடுத்தும் முயற்சிகளில் கைகோர்த்துள்ளன - என்றார்.

## 400 மாணவர்களுடன் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாணவி கிளிநொச்சி கொரோனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இதையடுத்து, பம்பைமடுவில் அமைந்துள்ள பல்கலைக்கழகத்தின் பெண்கள் விடுதியின் ஒருபகுதி சுமார் 400 மாணவர்களுடன் இன்று முதல் தற்காலிகமாக முடக்கப்பட்டுள்ளது.

அங்கிருந்து வெளிச்செல்வதற்கும் உட்செல்வதற்கும் எவருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை.

விடுதியிலுள்ள மாணவர்களுக்குக் கட்டம், கட்டமாக பி.சி.ஆர். பரிசோதனைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

## யாழ். நகர வர்த்தக .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பில் வர்த்தக சங்கத்தின் செயலாளர் ச.சிவலோகேசன், யாழ். மாவட்ட அரச அதிபருக்கு இன்று அனுப்பி வைத்துள்ள அவசர கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

கடந்த மாதம் 23ஆம் திகதி தொடக்கம் யாழ். நகரின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளில் வர்த்தக நடவடிக்கைகள் முடக்கப்பட்டதால் வர்த்தகர்களுக்கும் பொதுமக்களுக்கும் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இந்த விடயத்தில் சில பாரபட்சமான விடயங்களும் பின்பற்றப்பட்டுள்ளன என்பதைத் தங்களுக்குத் தெரிவிக்க விரும்புகின்றோம்.

01. வர்த்தகர்களின் செயற்பாடுகள் முற்றுமுழுதாக முடக்கப்பட்ட நிலையில் அதே முடக்கப்பட்ட பகுதிகளில் வங்கிகள், நிதி நிறுவனங்கள், காப்புறுதி நிறுவனங்கள், நகை அடகு நிலையங்கள் போன்றவை வழமை போல் இயங்குவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. இது எந்த விதத்திலும் நியாயமாகக் கருத முடியாதுள்ளது.

02. கடந்த சனி மற்றும் ஞாயிறு தினங்களில் சுமார் 1,440 நகர வர்த்தகர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதாக அறிகின்றோம். இதில் ஆக 43 பேருக்கு மாத்திரமே தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது எனச் சுகாதாரப் பிரிவினரால் தெரிவிக்கப்படுகின்றது. இது விகித அடிப்படையில் 3 சதவீதமாகக் கருதப்படுகின்றது.

03. நகரத்தின் முக்கிய பகுதி முடக்கப்பட்டு வர்த்தக நிலையங்கள் பூட்டப்பட்டுள்ளதால் உணவுப் பொருள்கள் விநியோகம் செய்யும் மொத்த வர்த்தகம் பாதிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் கூட்டுறவுத் துறை மற்றும் மாவட்டத்தின் ஏனைய பகுதிகளுக்கு அத்தியாவசிய உணவுப் பொருள்கள் விநியோகம் செய்ய முடியாதுள்ளது.

04. கடந்த வருடம் மார்ச் மாதத்தில் இருந்து கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக வர்த்தகத்துறை பாதிக்கப்பட்டுள்ளது. தற்போது தங்களால் மேற்கொள்ளப்பட்டுள்ள தடையானது அவர்களை மேலும் பாரியளவில் பொருளாதார ரீதியில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

05. நாட்டின் எல்லா பகுதிகளிலும் கொரோனாத் தாக்கம் இருப்பது தாங்கள் அறிந்ததே. அப்படி இருக்கும்போது யாழ்ப்பாணம் நகர வர்த்தகர்களை வர்த்தகம் செய்யவிடாது தடை விதித்து அவர்களைப் பாதிப்படையச் செய்திருப்பது கவலையளிக்கின்றது.

06. தமிழ் - சிங்களப் புத்தாண்டு வர இருக்கும் இவ்வேளையில் தாங்கள் ஏற்படுத்திய தடையானது வர்த்தகர்கள், உள்ளூர் உணவு உற்பத்தியில் ஈடுபடும் தொழில் முயற்சியாளர்கள், விவசாய உற்பத்திப் பொருள்களில் ஈடுபடுவோர் எனப் பல துறைசார்ந்த வர்த்தக நடவடிக்கைகளைப் பாரிய பாதிப்புக்களையும், பாரிய நட்டத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

07. யாழ். நகரின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த வர்த்தகத்துறையை முடக்கிவிட்டு ஏனைய அதிகளவான மக்கள் கூடும் சில நிறுவனங்களுக்கு சகஜமாக செயற்படுவதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது. இது எமது பகுதி வர்த்தகத் துறை பாதிப்படைய வேண்டும் என்ற நோக்கில் பாரபட்சமாக செய்யப்பட்டது என்று வர்த்தகர்கள் கருதுகின்றார்கள்.

08. பூட்டப்பட்டுள்ள கடை உரிமையாளர்கள் மற்றும் அங்கே தொழில் புரியும் தொழிலாளர்களுக்கான நிவாரணத்தையும் தொழில் இழப்புக்கான நட்ட ஈட்டையும் பாதிக்கப்பட்ட வர்த்தகர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கு வழங்குமாறு தங்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

ஆகவே, நாம் மேலே குறிப்பிட்ட விடயங்களை கவனத்தில் எடுத்து எமக்கு நீதி வழங்குவதுடன் எதிர்வரும் திங்கட்கிழமையிலிருந்து சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி கடைகளைத் திறந்து வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட அனுமதிக்க வேண்டும் என்று தங்களைத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம் - என்றுள்ளது.

இந்தக் கடிதத்தின் பிரதிகள் வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதன், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், சி.சிறிதரன், த. சித்தார்த்தன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செ.கஜேந்திரன், சி.வி.விக்னேஸ்வரன் மற்றும் யாழ். மாநகர சபையின் மேயர் வி.மணிவண்ணன், யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி ஆகியோருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

## நாட்டில் உச்சக்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அஜித் ரோஹண தெரிவித்தார்

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொலிஸ் மற்றும் விசேட அதிரடிப் படையைச் சேர்ந்த மொத்தம் 9 ஆயிரத்து 365 அதிகாரிகள் கடமைக்கு அனுப்பப்பட்டுள்ளனர், மேலும் 2 ஆயிரத்து 522 முப்படையினரும் பாதுகாப்பு வழங்க ரோந்துப் பணியில் ஈடுபடுவார்கள்.

நீர்கொழும்பு, சிலாபம், மற்றும் மட்டக்களப்பைச் சுற்றியுள்ள தேவாலயங்களில் விசேட பாதுகாப்பு நடவடிக்கைகள் வழங்கப்பட்டுள்ளன.- என்றார்.

## தமிழ் மக்களுக்கு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இந்த விவகாரத்தை சர்வதேசத்தைத் திருப்திப்படுத்தும் செயற்பாடாகக் கருதாது எமது பிரஜைகள் மீதான அக்கறையில் உண்மைகளைக் கண்டறியும் பொறிமுறையை முன்னெடுக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டவுடன் 2009ஆம் ஆண்டில் மக்கள் விடுதலை முன்னணி 14 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து அதில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் குறித்து பல்வேறு விடயங்களைச் சுட்டிக்காட்டியிருந்தது.

அத்தோடு போர்க்குற்றங்கள் இடம்பெற்றுள்ளதா?, காணாமல் ஆக்கப்பட்ட தமிழர்களுக்கு என்ன நடந்தது? போன்ற உண்மைகளைக் கண்டறியும் ஆணைக்குழுவை நியமிக்க வேண்டும் எனவும் வலியுறுத்தியிருந்தோம்.

நாட்டின் நீதிமன்ற சுயாதீனம் பலப்படுத்தப்பட வேண்டும் எனவும், பொது ஆணைக்குழுக்கள் சுயாதீனமாகச் செயற்பட வேண்டும் எனவும், சர்வாதிகாரப் போக்கைக் கைவிட்டு சகல மக்களுக்குமான உரிமைகளை பாதுகாக்கப்பட வேண்டும் எனவும் நீண்டகாலமாக நாம் கோரி வருகின்றோம்.

தற்சமயம் நிறைவேற்றப்பட்டுள்ள ஜெனிவாத் தீர்மானத்தால் இலங்கையை நெருக்கடிக்குள் தள்ளும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் என நம்ப முடியாது. அதேபோல் பொருளாதாரத் தடைகள் ஏற்படும் எனவும் கூறிவிட முடியாது.

ஒரு சிலர் அல்லது அரசு செய்த தவறுகளுக்கு ஒட்டுமொத்த நாட்டு மக்களும் கஷ்டத்தை அனுபவிக்க வேண்டுமா? என்ற கேள்வியும் எங்கள் மத்தியில் உள்ளது. - என்றார்.

## பொலிஸாரின் விரலை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணிபுரிந்த இளைஞருக்கும் இடையில் ஏற்பட்ட கருத்து முரண்பாடு, பின்னர் கைகலப்பாக மாறியதால், பொலிஸ் உத்தியோகத்தரின் கை விரலை இளைஞர் கடித்தார் என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

காயத்துக்குள்ளான பொலிஸ் அதிகாரி யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். விரலைக் கடித்த இளைஞரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை யாழ். பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

**மஞ்சள் கன்று விற்பனைக்கு**

1 1/2 மாத மஞ்சள் கன்று விற்பனைக்கு உண்டு. வீட்டிற்கு எடுத்து வந்து தரப்படும்.

**தொடர்புகளுக்கு 021 492 7778**

**இஞ்சி கன்று விற்பனைக்கு**

தரமான இஞ்சி கன்று விற்பனைக்கு உண்டு.

**தொடர்புகளுக்கு 021 492 7778**

**விளம்பரத் தொடர்புகளுக்கு - மின்னஞ்சல் - kalaikkathiradvt@gmail.com தொலைபேசி இலக்கம்- 076 443 8622**

**மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்**

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மணமக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள

**076 443 8619** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை - அதிகாலையும் மாலையும் - உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# கொழும்பின் சிந்தனை

**கோட்டாபபய ராஜபக்ஷ அரசின் கொடூரமான இனவெறிப் போக்குக்கு எதிராக மேற்குலகம் ஒன்று திரண்டிருப்பதுதான் இப்போதைய நிலைமை.**

**சர்வதேசத்துக்கு வாக்குறுதி அளித்து ஏமாற்றுவதுதான் இலங்கையில் ஒரே தந்திரோபாயம் என்பதும் –**

**அந்தத் தந்திரத்தையும் தாண்டி, வெளிப்படையாக இனவெறிப் போக்கைக் கக்கி நடந்து கொள்வதுதான் கோட்டாபய ராஜபக்ஷவின் போக்கு என்பதும் –**

**சர்வதேசத்துக்கு – குறிப்பாக மேற்குலகுக்கு – வெளிப்படையாகத் தோன்றத் தொடங்கியுள்ளது.**

**தற்போதைய சர்வதேசக் கட்டமைப்பு முறைமைகளின் கீழ் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் மூலம் இலங்கைக்குப் பாடம் புகட்டுவது – அல்லது இலங்கையில் இடம்பெற்றவை தொடர்பில் பொறுப்புக் கூறலை அதன் மூலம் நிலைநிறுத்துவது – சாத்தியமற்றது என்பது மேற்குலகுக்குத் தெரியும்.**

**அதனால்தான், ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலிலும் மேற்குலக சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றம் மூலமான முறைமைக்கு முயற்சிக்கவில்லை. அதைத் தவிர்த்து, சாத்தியமான, கைகூடக் கூடிய வழிமுறையை அது நாடுகின்றது.**

**ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் முன்னர் இலங்கை தொடர்பாக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் குறிப்பிடப்பட்ட காலக்கெடுவுக்கும் – அல்லது கால அவகாசத்துக்கும் – இந்த முறை நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்தின் கால அவகாசத்துக்கும் நிறைய வேறுபாடு உண்டு.**

**இப் பத்தியில் முன்னரும் பல தடவைகள் நாம் சுட்டிக்காட்டியபடி, முன்னைய தீர்மானங்களின் பின்னர் தீர்மான விடயங்களை நிறைவு செய்யும் பொறுப்பு இலங்கையின் களத்துக்குள் இருந்தது. அக்கால கட்டத்தில் உருப்படியாக ஏதும் செய்யாமல் இருந்துவிட்டு, கால அவகாசம் முடிந்ததும் அடுத்த தடவை ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலுக்கு வந்து மீண்டும் சாக்குப்போக்குச் சொல்லும் வாய்ப்பு இலங்கைக்கு இருந்தது. நீதியை நிலைநாட்டி, உண்மைகளைக் கண்டறிந்து, பொறுப்புக் கூறலை நடைமுறைப்படுத்தி, இழப்பீடுகளை வழங்கி, மீள நிகழாமையை உறுதிப்படுத்தும் சர்வதேசத்தின் எதிர்பார்ப்புக்கு எதிராக நேரடியாக – வெளிப்படையாக முரண்டு பிடிக்கும் போக்கில் கடந்த ஆண்டு வரை இலங்கை செயற்படவில்லை. அதனால் விட்டுப் பிடிக்க வேண்டிய கட்டாயம் சர்வதேசத்துக்கு இருந்தது.**

**இப்போது நிலைமை மாறி விட்டது; சூழலும் மாறி விட்டது; நிலைப்பாடுகளும் மாறி விட்டன.**

**மேற்படி விடயங்கள் எவற்றையும் சர்வதேசம் எதிர்பார்க்கும் நியாயமான தர நிலைப்பாட்டில் முன்னெடுக்க மாட்டோம் என்று கோட்டா ஆட்சிப் பீடம் வெட்டு ஒன்று துண்டு இரண்டாகக் கூறி விட்டது.**

**ஆகையினால், அதனடிப்படையில், இப்போது கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்தை நடைமுறைப்படுத்தி, மேற்படி விடயங்களைச் செய்ய மறுப்பதற்கான விளைவுகளை கொழும்பு ஆட்சிப் பீடம் எதிர்கொள்வதற்கான நடவடிக்கைகளை எடுக்கும் பொறுப்பு அந்தத் தீர்மானத்தை முன்மொழிந்து, அனுசரணைப் பணி வகித்து, அதை ஆதரித்து செயற்பட்ட நாற்பதுக்கும் அதிக நாடுகளின் தலையில் வீழ்ந்துள்ளது.**

**இலங்கை அரசைப் போல, காலத்தை இழுத்தடித்து விட்டு அடுத்தடுத்த ஜெனிவா அமர்வுகளுக்கு வந்து அவை சாக்குப் போக்குச் சொல்ல முடியாது.**

**களத்தில் ஏதும் காத்திரமாகத் தாம் ஆற்றிய விடயங்களை அவை பட்டியலிட வேண்டியிருக்கும்.**

**இது இலங்கை அரசுக்கும் நன்கு தெரியும். இந்த நிலைமை கொழும்பு ஆட்சிப் பீடத்துக்கும் புரிந்தமையால் அது சில விடயங்களில் முந்திக் கொள்வது போல காட்டிக் கொள்ள எத்தனிக்கின்றது.**

**இலங்கை விவகாரத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்குக் கொண்டு செல்ல முடியாது என்பதைப் புரிந்துள்ள மேற்கு நாடுகள், சர்வதேச நீதி நியாயாதிக்கம் என்ற அடிப்படையில் இலங்கையில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் தத்தமது நாடுகளில் நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் பகுதியளவிலேனும் பொறுப்புக் கூறலை நிலைநிறுத்த நடவடிக்கை எடுக்கலாம் என எதிர்பார்க்கின்றன.**

**இந்த வருடம் இலங்கை தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சமர்ப்பித்துள்ள அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டபடி இலங்கையில் குற்றமிழைத்தவர்கள் என அடையாளப்படுத்தப்படுபவர்களுக்கு எதிராக மேற்கு நாடுகள் தத்தமது தேசங்களில் பயணத் தடை, சொத்து முடக்கம், கறுப்புப் பட்டியலில் சேர்த்தல், தத்தமது நாடுகளுக்குள் அவர்கள் பிரவேசித்தால் கைது செய்து நடவடிக்கை எடுத்தல் போன்ற தண்டனைச் செயற்பாடுகளை முன்னெடுக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.**

**அதை, ஏற்கனவே ஊகித்துக் கொண்ட கொழும்பு அதற்கான பிரதிபலிப்பு நடவடிக்கைகளை முற்கூட்டியே தான் செய்வதாக நினைத்துக் கொண்டு –**

**வெளிநாட்டில் உள்ள புலம்பெயர்ந்த தமிழர்கள் மற்றும் தமிழ் அமைப்புகள் மீதான தடைப்பட்டியலை அறிவித்து, தனக்குத் தானே மாலை சூட்டிக் கொண்டுள்ளது.**

**இலங்கைப் படையினர் மற்றும் அதிகாரிகளுக்கு எதிராக மேற்குலகு செய்யப் போவதைப் புலம்பெயர் தமிழர் தரப்புக்கு எதிராக முற்கூட்டியே செய்து, தன்னைத் தானே ஆற்றுப்படுத்திக் கொள்கிறது கொழும்பு. அவ்வளவுதான்!**

# பல பிரச்சினைகளுக்கு தீர்வுகளை தொழிற்சங்க ரீதியில் வழங்கினோம்

## அமைச்சர் ஜீவன் தொண்டமான் பெருமிதம்



தொழிற்சங்க ரீதியில் தொழிலாளர்களின் பல பிரச்சினைகளுக்கு நாம் தீர்வுகளை பெற்றுக்கொடுத்துள்ளோம் என இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

கொட்டகலையில் அமைந்துள்ள சீ.எல்.எப். கேட்போர் கூடத்தில் நேற்று (வெள்ளிக்கிழமை) நடைபெற்ற உள்ளூராட்சி மன்றங்களில் காணப்படும் குறைநிறைகளை கண்டறிவதற்கான கலந்துரையாடலில் கலந்து கொண்டு ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேற்படி நிகழ்வு நடைபெற்ற பின்னர் ஆயிரம் ரூபா சம்பள உயர்வு மற்றும் கம்பனிகளின் செயற்பாடுகள் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே இராஜாங்க அமைச்சர் ஜீவன் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு–

50 ரூபா, 100 ரூபா எனக் கூறிக்கொண்டு கடந்த ஆட்சியின்போது 5 வருடங்கள் கடத்தப்பட்டன. அதற்கு எதிராக விமர்சனங்கள் முன்வைக்கப்படவில்லை. ஆனால் இன்று கம்பனிகளுக்கு எதிராக நாம் நீதிமன்றம்வரை சென்றுள்ளோம்.

இந்நிலையில் தொழிலாளர்களை உசுப்பேத்துவதற்கு சிலர் முயற்சிக்கின்றனர். அரசாங்கத்திடம் மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலம் உள்ளது, அப்படி இருக்கையில் நாடாளுமன்றத்தில் சட்டம் இயற்றியாவது ஏன் சம்பள உயர்வை வழங்கமுடியாது எனவும் கேட்கின்றனர். எடுத்த எடுப்பிலேயே எல்லாவற்றையும் செய்துவிடமுடியாது. அதற்கென நடைமுறைகள் உள்ளன.

இதன் முதற்கட்ட நடவடிக்கையாகத்தான் சம்பள நிர்ணய சபை ஊடாக தீர்மானம் எடுக்கப்பட்டது. இதற்கு எதிராக மேன்முறையீடு செய்யும் உரிமையும், நீதிமன்றம் செல்லும் உரிமைகளும் கம்பனிகளுக்கு இருக்கின்றன. ஆனால் 5 ஆம் திகதி நல்ல முடிவு வரும் என நம்புகின்றோம்.

தொழிற்சங்க ரீதியில் தொழிலாளர்களின் பல பிரச்சினைகளுக்கு நாம் தீர்வுகளை பெற்றுக்கொடுத்துள்ளோம். பெற்றுக்கொடுத்தும் வருகின்றோம். மற்றைய தரப்பினரும் தொழிற்சங்கம் நடத்துகின்றனர்.

இவர்கள் விமர்சனங்களை முன்வைப்பதையே பணியாக முன்னெடுக்கின்றனர். நாம் பொறுமையாக இருக்கின்றோம். அதற்கு பயம் காரணம் அல்ல. நீதிமன்ற தீர்ப்புவரும் வரை காத்திருக்கின்றோம்.

சிலவேளை நீதிமன்ற தீர்ப்பு தொழிலாளர்களுக்கு சாதகமாக அமையாவிட்டால், அடுத்து என்ன செய்வது என்பதும் தெரியும். நாடாளுமன்றத்தில் சட்டம் இயற்றப்படும். இது தொடர்பில் தொழில் அமைச்சர் ஏற்கனவே அறிவித்துள்ளார். – என்றார்.

# ஈஸ்டர் தாக்குதல் குறித்த அமைச்சரவை அறிக்கை திங்கட்கிழமை ஜனாதிபதியிடம் கையளிக்கப்படும்

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பிலான ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளை ஆய்வு செய்ய நியமிக்கப்பட்ட அமைச்சரவை துணைக்குழுவின் அறிக்கை திங்கட்கிழமை ஜனாதிபதியிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை மற்றும் அவர்கள் முன்வைத்த பரிந்துரைகளை ஆய்வு செய்ய பெப்ரவரி 19 ஆம் திகதி அமைச்சரவை துணைக்குழு ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டது.

இந்நிலையில் கம்பஹாவில் நேற்று (வெள்ளிக்கிழமை) ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, இந்த அறிக்கை திங்களன்று ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்ட பின்னர் அவரால் பகிரங்கப்படுத்தப்படும் என்றார்.

மேலும் இதுபோன்ற சம்பவங்கள் மீண்டும் நிகழாமல் பார்த்துக் கொள்வதை அரசாங்கம் உறுதி செய்யும் என்றும் கடந்த அரசாங்கத்தின் அலட்சியம் மற்றும் பொறுப்பேற்கத் தவறியமை நாட்டின் பொருளாதாரத்தையும் பாதித்துள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

# உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்: பல உண்மைகள் மூடுமந்திரம்

## நீதி கிடைக்கும் வரை மௌனிக்கப் போவதில்லை என சம்பிக்க சபதம்



உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு நீதி கோருவதில் நாம் ஒருபோதும் மௌனிக்கப் போவதில்லை. தகவல்கள் கிடைத்திருந்தும் தாக்குதல்களை தடுக்கத் தவறியவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பது மாத்திரமின்றி, 2010 ஆம் ஆண்டு வரை சஹ்ரான் உள்ளிட்ட தௌஹீத் ஜமாஅத் அமைப்பினருக்கு இராணுவ புலனாய்வுப் பிரிவினால் ஊதியம் வழங்கப்பட்டமைக்கான காரணங்கள் என்பவையும் எதிர்வரும் அரசாங்கத்தின் மூலமாகவாவது வெளிப்படுத்தப்பட வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் –

உயிர்த்த ஞாயிறு தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை முழுமையற்றது.

எனினும் அதில் பல முக்கிய விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அந்த விடயங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட வேண்டும்.

ஐ.எஸ்.ஐ.எஸ். உள்ளிட்ட எந்தவொரு தீவிரவாத அமைப்புக்களின் தலைவர்கள் அவர்களின் உயிரை மாய்த்துக்கொள்ளவில்லை. அவ்வாறிருக்கையில் சஹ்ரான் எவ்வாறு பிரதான சூத்திரதாரியாக இருப்பார்?

எனவே கடந்த 2010 ஆம் ஆண்டு வரை சஹ்ரான் உள்ளிட்ட தௌஹீத் ஜமாஅத் அமைப்பினருக்கு இராணுவப் புலனாய்வு பிரிவு ஊதியம் வழங்கியமை , 2007 இல் கிழக்கில் காத்தான்குடி பிரதேசத்தில் குறிப்பிட்ட சிலருக்கு வழங்கப்பட்ட ரி – 56 ரக துப்பாக்கிகள் யுத்தம் நிறைவடைந்த பின்னர் மீளப் பெறப்படாமை, உயிர்த்த ஞாயிறு தாக்குதலன்று தாஜ் சமுத்திரா ஹோட்டலில் தாக்குதல்களை மேற்கொள்ளவிருந்த தாக்குதல்தாரி தெஹிவளைக்குச் சென்று குண்டை வெடிக்கச் செய்ய முன்னர் இராணுவப் புலனாய்வு பிரிவு அதிகாரியொருவரை சந்தித்தார் என முன்னாள் பொலிஸ்மா அதிபர் சாட்சி வழங்கியமை உள்ளிட்ட விடயங்கள் தொடர்பிலும் உண்மை வெளிப்படுத்தப்பட வேண்டும்.

இந்த விவகாரத்தில் பல விடயங்களை மறைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. எனவே எதிர்காலத்தில் தெரிவு செய்யப்படும் அரசாங்கமேனும் இதன் உண்மையான பின்னணியை கண்டறிய வேண்டும்.

தாக்குதல்கள் தொடர்பில் தகவல்கள் கிடைத்திருந்தும் அதனைத் தடுக்கத் தவறியவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது மாத்திரமன்றி, இவ்வாறான உண்மைகளும் வெளிப்படுத்தப்பட வேண்டும். இதற்கான நியாயத்தை கோருவதில் நாம் ஒருபோதும் மௌனிக்க மாட்டோம். – என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோல்வியை எதிர்கொள்ளும் போதெல்லாம் ரெய்ட் இது பா.ஜ.கவின் வழிமுறை – ராகுல் காந்தி டுவிட்

மு.க.ஸ்டாலினின் மகள் உள்ளிட்ட பல்வேறு தி.மு.க. நிர்வாகிகளின் வீடுகளில் வருமான வரித்துறையினர் சோதனை மேற்கொண்டு வருவதற்கு ராகுல் காந்தி கண்டனம் தெரிவித்துள்ளார்.

தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலினின் மகள் செந்தாமரை, மருமகன் சபரீசன், கரூர் தொகுதி தி.மு.க. வேட்பாளர் செந்தில் பாலாஜி உள்ளிட்ட தி.மு.க. பிரமுகர்களின் வீடுகளில் வருமான வரித்துறை அதிகாரிகள் சோதனை நடத்தினர். தேர்தலுக்கு இன்னும் 3 நாள்களே உள்ள நிலையில் வருமான வரித்துறையினரின் இந்த திடீர் சோதனை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதைத்தொடர்ந்து வருமான வரித்துறை சோதனை அரசியல் பழிவாங்கும் நடவடிக்கை என்று கண்டனம் தெரிவித்துள்ள அரசியல் கட்சித் தலைவர்கள், வருமான வரித்துறை அமைப்பை மத்திய, மாநில அரசுகள் தவறாகப் பயன்படுத்துவதாகவும் புகார் தெரிவித்துள்ளனர்.



இந்நிலையில், தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலினின் மகள் உள்ளிட்ட பல்வேறு தி.மு.க. நிர்வாகிகளில் வீடுகளில் வருமான வரித்துறையினர் சோதனை மேற்கொண்டு வருவதற்கு காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி கண்டனம் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக ராகுல் காந்தி, தன்னுடைய டுவிட்டர் பக்கத்தில், தோல்வியை எதிர்கொள்ளும் போதெல்லாம் பா.ஜ.க. கடைபிடிக்கும் வழிமுறை ஐடி ரெய்டுதான் என்று குறிப் பிட்டுள்ளார்.

# கனிமொழிக்கு கொரோனா உறுதி



திமுக எம்.பியும் அக்கட்சியின் மகளிரணிச் செயலாளருமான கனிமொழிக்கு கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ளது.

தமிழகத்தில் நடைபெறவுள்ள சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி கனிமொழி எம்.பி தி.மு.க. கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தீவிர பரப்புரையில் ஈடுபட்டு வந்தார். தென் மண்டல தொகுதி பொறுப்பாளராகவும் பொறுப்பேற்றுக்கொண்ட நிலையில் அவர் தேர்தல் களத்தில் முனைப்போடு செயல்பட்டு வந்தார். இரண்டு தினங்களுக்கு முன்பு தேனியில் பரப்புரையில் ஈடுபட்டபோது அவருக்கு லேசான காய்ச்சல் இருந்தது. அதனைத் தொடர்ந்து சிகிச்சை பெற்று வந்தார்.

பரப்புரையை பாதியில் விட்டுவிட்டு சென்னை திரும்பிய அவருக்கு இன்று காலை தொண்டைக் கரகரப்பு மற்றும் மூச்சுத்திணறல் ஏற்பட்டது. பரிசோதனை செய்யப்பட்டதில் அவருக்கு கொரோனாத் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

பரப்புரையின் போது கனிமொழியோடு நெருக்கமாக இருந்தவர்கள் அனைவரும் தனிமைப்படுத்திக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

# டெல்லியில் முழுநேர ஊரடங்கில்லை; முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் உறுதி



டெல்லியில் மீண்டும் முழுநேர ஊரடங்கை அமுல்படுத்தும் திட்டம் இல்லை என முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் தெரிவித்துள்ளார்.

தலைநகரில் கொரோனாப் பாதிப்பு அதிகரித்து வரும் நிலையில் முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் தன்னுடைய இல்லத்தில் சுகாதாரத்துறை அமைச்சர் டொக்டர் சத்யேந்திர ஜெயின் மற்றும் முக்கிய அதிகாரிகளுடன் அவசர ஆலோசனை நடத்தினார். இதன் பின் செய்தியாளர்களுக்கு அவர் பேட்டியளித்தார்.

டெல்லியில் மீண்டும் கொரோனா தொற்று உயர்வது, நான்காவது அலையைக் காட்டுவதாகத் தெரிவித்த அவர், மீண்டும் முழு நேர ஊரடங்கை அமுல்படுத்தும் திட்டம் இல்லை என்றும் கொரோனா தடுப்பூசியை மக்களுக்கு கொண்டு சேர்ப்பதில் கவனம் செலுத்தி வருவதாகவும் அந்தப் பேட்டியின்போது கெஜ்ரிவால் குறிப்பிட்டார்.

# இந்தியாவில் கொரோனா; ஒரே நாளில் 714 பேர் பலி!

கடந்த 6 மாதங்களில் இல்லாத அளவுக்கு ஒருநாளுக்கான கொரோனாப் பாதிப்பு 89 ஆயிரத்தை தாண்டியுள்ளது. 24 மணி நேரத்தில் 714 பேர் கொரோனாவுக்கு பலியாகியும் உள்ளனர்.

இந்தியாவில் கொரோனா வைரஸ் பாதிப்பு கடந்த மாதத்தில் இருந்து அதிகரித்து வருகிறது. இன்று தொடர்ந்து 24 ஆவது நாளாக பாதிப்பு உயர்ந்துள்ளது. இன்று காலை 8 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் புதிதாக 89,129 பேர் கொரோனா பாதிப்புக்கு உள்ளாகியிருக்கிறார்கள். முந்தைய நாளில் 81ஆயிரம் பேர் பாதிக்கப்பட்ட நிலையில் நேற்று ஒரே நாளில் இந்த எண்ணிக்கை 8 ஆயிரத்தால் அதிகரித்துள்ளது.

இதையடுத்து, நாட்டின் மொத்த கொரோனாப் பாதிப்பு 1 கோடியே 23 லட்சத்து 92 ஆயிரத்து 260 ஆக உயர்ந்துள்ளது. இவர்களில் தற்போது சிகிச்சை பெற்று வருபவர்கள் எண்ணிக்கை 6 லட்சத்து 58 ஆயிரத்து 909 ஆகவும், கடந்த 24 மணி நேரத்தில் கொரோனாவுக்கு பலியானோர் 714 ஆகவும் இருப்பதாக தகவல்கள் கூறுகின்றன.

இந்தியாவில் கொரோனாவால் ஏற்பட்ட மொத்த பலி எண்ணிக்கை 1 லட்சத்து 64 ஆயிரத்து 110 ஆக அதிகரித்துள்ளது. இதே நேரம், நாடு முழுவதும் 7,30,54,295 பேருக்கு கொரோனாத் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளதாக மத்திய சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

# கொரோனாத் தாக்கம்; ஏப்ரலில் உச்சம் தொட்டு மே இறுதி வரை நீடிக்கும்



இந்தியாவில் கொரோனாவின் இரண்டாவது அலை இந்த மாத மத்தியில் உச்சத்தைத் தொட்டு மே மாத இறுதிவரை நீடிக்கும் என ஆய்வாளர்கள் கணித்துள்ளனர்.

நாட்டில் ஒரு நாள் கொரோனா பாதிப்பு 80 ஆயிரத்தை கடந்துள்ள நிலையில் இறப்புகள் 500 ஐ நெருங்கிக்கொண்டுள்ளன. இந்நிலையில் கான்பூர் ஐ.ஐடியைச் சேர்ந்த மணீந்தர் அகர்வால் என்ற ஆய்வாளர் கணிதவியல் கோட்பாடுகளைப் பயன்படுத்தி கணிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளார்.

தினசரி கொரோனா தொற்றுகளின் எண்ணிக்கை இன்னும் இரு வாரங்களில் அதாவது ஏப்ரல் 15 ஆம் திகதியிலிருந்து 20 ஆம் திகதிக்குள் உச்சத்தைத் தொடும் என்றும் இதன் பின்னர் படிப்படியாகக் குறைந்து அடுத்த மாத இறுதியில் குறைந்த எண்ணிக்கையை அடையும் என்றும் மணீந்தர் அகர்வால் கூறியுள்ளார்.

பாரத ஸ்டேட் வங்கியின் ஆய்வுப் பிரிவு மேற்கொண்ட கணிப்பின் பின்னரும் இதே போன்ற முடிவை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இது தவிர கௌதம் மேனன் என்ற ஹரியானா அசோகா பல்கலைக்கழக ஆய்வாளரும் ஏப்ரல் மத்தியிலிருந்து மே மத்திக்குள் தினசரி இறப்புகள் உச்சத்தை தொடும் எனக் கூறியுள்ளார்.

கொரோனா முதல் அலையின்போது கடந்த வருடத்தில் கணிதவியல் கோட்பாடுகளின்படி மேற்கொள்ளப்பட்ட கணிப்புகள் தொற்று எண்ணிக்கை செப்ரெம்பரில் உச்சத்தைத் தொட்டு பெப்ரவரியில் குறையும் என கூறியிருந்தது அது அப்படியே நடந்ததும் குறிப்பிடத்தக்கது.

# வேறு தொகுதியில் போட்டியிடும்படி பிரதமர் எனக்கு ஆலோசனை கூறத் தேவையில்லை

## மம்தா பானர்ஜி தெரிவிப்பு

மற்றொரு தொகுதியில் போட்டியிடுமாறு பிரதமர் தனக்கு ஆலோசனை கூறத் தேவையில்லை என்றும், நந்திகிராமில் உறுதியாக வெற்றிபெற முடியும் என்றும் மம்தா பானர்ஜி தெரிவித்துள்ளார்.

நந்திகிராம் தொகுதியில் போட்டியிடும் மம்தா பானர்ஜி தோல்வி பயத்தால் மற்றொரு தொகுதியிலும் போட்டியிடத் திட்டமிட்டுள்ளதாகப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

இதற்குப் பதிலளிக்கும் வகையில் கூச்பிகாரில் பேசிய மம்தா பானர்ஜி, நந்திகிராமில் உறுதியாக வெற்றிபெற்று எதிரிகளின் முகத்தில் கரியைப் பூசப்போவதாக தெரிவித்தார்.



# அனுமதியின்றி தேர்தல் பரப்புரை நடிகை குஷ்பு மீது வழக்குப்பதிவு



சென்னை, ஏப்.03

ஆயிரம் விளக்கு தொகுதி பா.ஜ.க. வேட்பாளர் குஷ்பு மீது இரண்ட பிரிவுகளின் கீழ் கோடம்பாக்கம் காவல்நிலை யத்தில் வழக்குப்பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

கோடம்பாக்கத்தில் வழிபாட்டுத்தலங்கள் முன்பாக பரப்புரை செய்ய காவல்துறையினர் அனுமதி தராத நிலையில், குஷ்பு அங்கு பரப்புரை மேற்கொண்டதால் அவர்மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

சட்டவிரோதமாகக் கூடுதல், அரசு அதிகாரியின் உத்தரவை மீறி செயல்படுதல் ஆகிய பிரிவுகளின் கீழ் குஷ்பு மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளதாகச் சொல்லப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செவ்வாய் கிரகத்தில் நில அதிர்வு கண்டறிந்த நாசா விஞ்ஞானிகள்







செவ்வாய் கிரகத்தில் இருமுறை நிலநடுக்கம் ஏற்பட்டதை நாசா விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

பூமியைப்போன்று செவ்வாயில் நிலத்தடித் தட்டுக்கள் இல்லை என்றாலும் எரிமலை வெடிப்பினால் நில அதிர்வு ஏற்பட வாய்ப்பு இருப்பதாகக் கூறப்படுகிறது. இந்நிலையில் நாசா விஞ்ஞானிகள் அனுப்பிய இன்சைட் என்ற ஆய்வூர்தி நடத்திய சோதனையில் அங்கு இருமுறை நில அதிர்வு ஏற்பட்டது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அங்குள்ள செர்பரஸ் போஸே என்ற இடத்தில் ஏற்பட்ட நில அதிர்வுகள் முறையே 3.3 மற்றும் 3.1 ஆக இருக்கலாம் என கணிக்கப்பட்டுள்ளது. இரு நில அதிர்வுகளுக்குப் பின்னர் சிறிதும் பெரிதுமாக 500 முறை நில அதிர்வு ஏற்பட்டதாகவும் நாசா கூறியுள்ளது.

## தாய்வான் ரயில் விபத்து;

# கட்டுமான தள முகாமையாளரை கைது செய்வதற்குக் கோரிக்கை





தாய்வானின் ரயில் விபத்துக்கு மூல காரணமானவர் என கருதப்படும் ஒரு கட்டுமான தள முகாமையாளரை கைது செய்ய உத்தரவிட கோரியுள்ளனர், அவருடைய ட்ரக் வண்டியே குறைந்தது 50 பேர் பலியாகியுள்ள இந்த ரயில் விபத்துக்கு மூல காரணம் என நம்பப்படுகிறது. மீட்புப் பணிகள் இன்று சனிக்கிழமையும் தொடர்கின்றன அதேநேரம் இடிபாடுகளில் மேலும் சடலங்கள் காணப்படலாம் என்றும் அஞ்சப்படுகின்றது.

ஏழு தசாப்தங்களில் தாய்வானின் மிக மோசமான ரயில் விபத்து என தெரிவிக்கப்படும் இந்த விபத்தானது நடைபெற்ற இடத்துக்கு அருகில் உள்ள கட்டுமான தளத்தின் முகாமையாளருடைய ட்ரக் ரக வண்டி எக்ஸ் பிரஸ் ரயில் மீது மோதியதால் ஏற்பட்டது எனவும் அவர் வாகனத்தின் பிரேக்கை சரியாக போடாதமையே இதற்கு காரணம் எனவும் சந்தேகிக்கப்படுகிறது.

இந்த ரயில் தைவானின் தலைநகரான தைபியில் இருந்து கிட்டத்தட்ட 500 பேரை ஏற்றிச் சென்ற போது, அது ஹுலியனுக்கு வடக்கே ஒரு சுரங்கப்பாதையில் தடம் புரண்டது.

அலட்சியம் மற்றும் போலி ஆவணங்களால் மரணத்தை ஏற்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் முகா மையாளரை கைது செய்ய அரசு வழக்கறிஞர்கள் நீதிமன்றத்தில் விண்ணப்பித்ததாக நீதித்துறை வழக்கு விசாரணை விவகார இயக்குநர் ஜெனரல் லின் ஜின் – சுன் சனிக்கிழமை செய்தியாளர்களிடம் தெரி வித்தார்.

ஹுலியன் விபத்துக்கு முன்னர், தைவானின் மிக மோசமான ரயில் விபத்து 1948 இல் நிகழ்ந்தது, அப்போது ஒரு ரயில் தீப்பிடித்து 64 பேர் இறந்துதுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

# இரண்டு சோமாலிய இராணுவத் தளங்கள் தீவிரவாதிகளின் தாக்குதலுக்கு உள்ளாகின



தலைநகர் மொகாடிஷுவிலிருந்து தென்மேற்கே சுமார் 100 கிலோமீற்றர் தொலைவில் உள்ள சோமாலிய இராணுவத்திற்கு சொந்தமான இரண்டு இராணுவ தளங்களை இன்று சனிக்கிழமை அதிகாலை அல் பாப் தீவிரவாதிகள் தாக்கினர் என்று சாட்சிகள் மற்றும் போராளிகள் தெரிவித்தனர்.

அல் – கொய்தாவுடன் இணைக்கப்பட்டுள்ள அல் பாப், பல ஆண்டுகளாக தாக்குதல்களை நடாத்துவது மற்றும் வர்த்தகத்திற்கு சுங்கவரிகளை விதிக்கும் இஸ்லாமிய போராளிகளால் ஆனது. இவர்கள் கடுமையான இஸ்லாமிய மத சட்டத்தை அறிமுகப்படுத்தும் பிரசாரத்திலும் தம்மை முன்னிலைப்படுத்தி வருகின்றனர்.

இந்த தாக்குதல் குறித்து உடனடி உத்தியோகபூர்வ கருத்துக்களோ அல்லது விபத்து குறித்த விவரங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை, ஆனால் சோமாலிய இராணுவ அதிகாரி தாக்குதல்களை உறுதிப்படுத்தினார்.

மூன்றாவது குண்டுத்தாக்குதல் ஆனது தாக்குதலுக்குப் பின்னர் தலைநகரில் இருந்து இந்த இரு தளங்களை நோக்கி விரைந்து வந்த துருப்புக்களை இலக்குவைத்து நடாத்தப்பட்டது.

பாரியர் தளத்தின் மீது வாகனம் மூலம் தற்கொலை குண்டு தாக்குதலை நடத்தியதாக அல் – பாப் கூறியது, அதே நேரத்தில் பாரியர் இராணுவ தளம் வலுப்படுத்துவதைத் தடுக்க அருகிலுள்ள அவ்திகல் இராணுவத் தளத்தை கார் வெடிகுண்டு மற்றும் போராளிகளுடன் தாக்கியதாகவும் தெரிவித்துள்ளது.

அல் – பாபின் இராணுவ நடவடிக்கைகளின் செய்தித் தொடர்பாளர் அப்தியாசிஸ் அபு முசாப் ராய்ட்டர்ஸிடம் பாரியர் இராணுவத்தள தாக்குதல் குறித்து சுருக்கமாக கூறுகையில் நாங்கள் பாரியர் இராணுவத்தளதை தாக்கினோம், மூன்று இராணுவ வாகனங்களை எரித்தோம், இரண்டு வாகனங்களை எடுத்தோம்.– என்றார்.

இராணுவ அதிகாரி ஹுசைன் நூர் தெரிவிக்கையில், பாரியர் மற்றும் அவ்திகல் ஆகிய தளங்கள் மீதான தாக்குதலில் இராணுவம் பல வீரர்களை இழந்தது என எந்த ஒரு எண்ணிக்கையும் குறிப்பிடாமல் தெரிவித்தார்.

இப்போது இரு தளங்கள் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகள் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது, மேலும், நாங்கள் சுற்றியுள்ள காட்டில் போராளிகளைப் பின்தொடர்கிறோம் என்றும் அவர் கூறினார்.

# வெள்ளை மாளிகையில் கொடிகளை அரை கம்பத்தில் பறக்க விட உத்தரவு

அமெரிக்காவில் நாடாளுமன்றம் அமைந்துள்ள கேபிடால் கட்டடத்தின் வெளியே மர்ம நபர் ஒருவர் நீல நிற செடான் காரை கொண்டு பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த அதிகாரிகள் மீது மோதியுள்ளார். இதில் 2 அதிகாரிகள் காயமடைந்தனர்.

இதன்பின் காரில் இருந்து வெளியே குதித்த சாரதி அதிகாரிகளை கத்தியால் குத்தியுள்ளார். இதில், அதிகாரி ஒருவர் பலியானார். இதனால் கேபிடால் பொலிஸார் அந்த நபரை சுட்டுக் கொன்றனர்.

தாக்குதல் நடத்திய நபரின் அடையாளம் தெரியவில்லை. தாக்குதலுக்கான நோக்கம் பற்றிய விவரமும் வெளியிடப்படவில்லை.

இதுகுறித்து, வொஷிங்டன் பெருநகர காவல்துறை உயரதிகாரி ராபர்ட் கன்டீ கூறுகையில், இது பயங்கரவாத தாக்குதலுடன் தொடர்புடையது அல்ல. விசாரணை தொடர்ந்து நடைபெறும் எனக் கூறினார்.

**சம்பவ இடத்தில் பொலிஸார்**

பாதுகாப்பை கருத்தில் கொண்டு கேபிடால் கட்டடம் முடக்கப்பட்டுள்ளது. கட்டடத்தின் உள்ளே இருந்து யாருக்கும் வெளியே செல்ல அனுமதியில்லை. இதேபோல், கட்டடத்திற்குள் செல்வதற்கும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.



இந்நிலையில், அமெரிக்க கேபிடால் கட்டிட பாதுகாப்பு அதிகாரியான வில்லியம் பில்லி இவான்ஸ் மர்ம நபர் தாக்குதலில் கொல்லப்பட்டார். அவர் 18 ஆண்டு கால பணி அனுபவம் கொண்டவர். இந்த தாக்குதலுக்கு அமெரிக்க அதிபர் ஜோ பைடன், அவரது மனைவி ஜில் பைடன் மனமுடைந்து விட்டதாக தெரிவித்துள்ளனர்.

இதுபற்றி அவர் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், அமெரிக்காவின் கேபிடால் பகுதியில் பாதுகாப்பு சோதனைச் சாவடியில் நடந்த வன்முறை தாக்குதலில் காவல் அதிகாரி வில்லியம் இவான்ஸ் கொல்லப்பட்டும், சக அதிகாரி உயிருக்குப் போராடி வருகிறார் என்பது பற்றியும் அறிந்து ஜில் மற்றும் நான் மனமுடைந்து போனோம். வெள்ளை மாளிகை கொடிக் கம்பங்கள் அரை கம்பத்தில் பறக்க விடப்படும் என்ற உத்தரவை பிறப்பித்துள்ளார்.

# மனித வரலாற்றில் முதன் முறையாக 3 பிறப்புறுப்புகளுடன் பிறந்த ஆண் குழந்தை

மனித வரலாற்றில் முதன் முறையாக ஈராக்கில் 3 பிறப்புறுப்புகளுடன் ஆண் குழந்தை பிறந்து அதிசயத்தை ஏற்படுத்திய நிலையில், மருத்துவர்கள் அதில் இரண்டை அறுவை சிகிச்சை செய்து அகற்றி உள்ளனர்.

இதுகுறித்து டாக்டர் ஷாகிர் சலீம் ஜபாலி கூறும் போது –

எங்களுக்கு தெரிந்த வரை உலகிலேயே டிரிபில்லா என்றும் அழைக்கப்படும் மூன்று பிறப்புறுப்புகளுடன் ஆண் குழந்தை பிறந்ததாக பதிவு செய்யப்பட்டது இதுதான் முதல் முறை. மனிதர்கள் வரலாற்றில் இதேபோன்ற 3 பிறப்புறுப்புகளுடன் குழந்தை பிறந்ததாக இதுவரை ஏதும் பதிவாகவில்லை.

பிறக்கும் 60 லட்சம் குழந்தைகளில் ஒரே ஒரு குழந்தை மட்டும் டிபல்லா எனப்படும் இரண்டு பிறப்புறுப்புகளுடன் பிறக்கும். ஆனால், முதன் முறையாக 3 பிறப்புறுப்புகளுடன் ஆண் குழந்தை பிறந்துள்ளது.

குழந்தையின் 3 பிறப்புறுப்புகளில் ஒன்று மட்டுமே செயல்பட்டது. மற்ற இரண்டு உறுப்புக்களால் குழந்தைக்கு எந்த வித பாதிப்பும் இல்லை என்றாலும் அதை அகற்றுவது நல்லது என மருத்துவர்கள் முடிவெடுத்தனர். பின் அறுவை சிகிச்சை மூலம் குழந்தையின் இரண்டு செயல்படாத பிறப்புறுப்புகளும் அகற்றபட்டன என டாக்டர் ஷாகிர் சலீம் ஜபாலி கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாயத்திற்கென வாங்கும் காணிகள் கைமாறி விற்பனை செய்யப்படுகின்றன

## வியாழேந்திரன் தெரிவிப்பு



வாகரைப்பிரதேசத்திலுள்ள காணிகளை பண்ணை மற்றும் விவசாயம் செய்யப் போகின்றோம் என்று பெற்று அவற்றை கைமாறி விற்பனை செய்யும் வரலாறு வாகரையில் இடம்பெற்று வருகின்றது என இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் தெரிவித்தார்.

வாகரைப் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கத்தரி செய்கை விவசாயிகள் சந்திப்பும், உதவி வழங்கும் நிகழ்வும் நேற்று மாங்கேணியில் இடம்பெற்றபோது இதனைத் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிக வறுமையின் வாழும் மக்களை கொண்ட பிரதேசமாக வாகரைப் பிரதேசம் காணப்படுகின்றது. ஆனால் தற்போது அபிவிருத்தி காணப்பட்டு வருகின்றது. வாகரைப் பிரதேச நில வளத்தினை முழுமையாக பயன்படுத்த முடியா பயங்கரமான சூழ்நிலையில் தான் வாகரை மக்கள் காணப்படுகின்றனர்.

தங்களது உடல் உறுப்புக்களை இழந்து வாகரைப் பிரதேச மக்கள் நிலங்களை பாதுகாத்தனர். ஆனால் தற்போது மட்டக்களப்பு மாவட்டத்தினை சாராத, பணம் படைத்த பலருக்கு இங்கு நூற்றுக் கணக்கான காணிகள் உள்ளன. நாங்கள் பண்ணை மற்றும் விவசாயம் செய்யப் போகின்றோம் என்று பெற்று அவற்றை கைமாறி விற்பனை செய்யும் வரலாறு வாகரையில் இடம்பெறுகின்றது.

வாகரைப் பிரதேசத்தில் வாழ்வாதாரத்தினை கட்டியெழுப்ப முடியாத வாகரை மக்களுக்கு காணிகள் பிரித்து வழங்கப்பட வேண்டும். வாகரை மக்களுக்கு காணி, வளம் என்பவற்றை வழங்கும் பட்சத்தில் அவர்களும் பொருளாதார ரீதியில் முன்னேற்றமடைய முடியும்.

நிலத்தைப் பாதுகாக்க வேண்டும், வளத்தைப் பாதுகாக்க வேண்டும், எல்லைக் கிராமத்தினை பாதுகாக்க வேண்டும் என்று இன்று பலர் பேசுகின்றனர். சும்மா பேசுவது நல்லமல்ல. எல்லைக் கிராமத்திலுள்ள மக்களின் அடிப் படை பிரச்சினைகளை சீர்செய்து வழங்கும் பட்சத்தில் மக்கள் இடம்பெயர்வு இடம்பெறாது என்றார்.

# அடிப்படைவாதம் பற்றி முகநூலில் பதிவிட்ட 38 வயதுடைய மற்றுமொருவர் கைதாகினார்

மட்டக்களப்பு, ஏப். 03

அடிப்படைவாதக் கருத்தை முகநூலில் பதிவிட்டமை தொடர்பாக மட்டக்களப்பு காத்தான்குடியில் பொதுச் சுகாதார உத்தியோகத்தர் ஒருவர் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

காத்தான்குடியில் உள்ள அவரது வீட்டில் வைத்தே நேற்று மாலை இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதாக பொலிஸ் உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.



இந்நிலையில், கைதுசெய்யப்பட்டுள்ள சந்தேகநபர் மூன்று மாதகால பொலிஸ் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

காத்தான்குடியில் பொதுச் சுகாதார உத்தியோகத்தராகக் கடமையாற்றிவரும் 38 வயதுடைய குறித்த நபர், முஸ்லிம் அடிப்படைவாத அமைப்பு ஒன்றின் அடிப்படைவாதக் கொள்கைகளை முகநூலில் தரவேற்றி வந்ததுடன் அந்த அமைப்புடன் தொடர்புகளைப் பேணிவந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இளைஞர்களுக்கு பாலியல் சம்பந்தமான விழிப்புணர்வு நிகழ்ச்சி

பாலியல் ஆரோக்கியத்தை ஊக்குவித்தல் மற்றும் பாலியல் ரீதியாக கடத்தப்படும் நோய்களிலிருந்து முற்றாக காத்தல் ஆகிய செயற்பாடுகளில் இளைஞர்களின் ஒத்துழைப்பைப் பெறும் நோக்கில் இளைஞர்களுக்கான விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சி இன்று காலை இலங்கை ஐக்கிய சமூக முன்னணியின் ஏற்பாட்டில் அமைப்பின் தலைவரும், முன்னாள் இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினருமான ஏ. கபூர் அன்வர் தலைமையில் இடம்பெற்றது.

கல்முனை பிராந்திய பாலியல் நோய்கள் தடுப்புப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.என்.எம். தில்ஷான், பாலியல் ஆரோக்கியத்தை ஊக்குவித்தல் மற்றும் பாலியல் ரீதியாக கடத்தப்படும் நோய்களிலிருந்து முற்றாக காத்தல் தொடர்பிலான விரிவுரை நிகழ்த்தினார்.

# ஆவணங்களை பெறமுடியாதவர்களுக்கு செலவுகளுக்கான கொடுப்பனவு வழங்கல்

*திருகோணமலை மாவட்டத்தின் மூதூர், மற்றும் வெருகல் பிரதேச செயலக பிரிவுகளில் பிறப்பத்தாட்சி பத்திரம் மற்றும் அடையாள அட்டையை பெறுவதற்கான ஆவணங்களை பெறமுடியாதவர்களுக்கு உதவும் வகையில் அதற்கான முத்திரை உள்ளிட்ட செலவுகளுக்கான கொடுப்பனவு நேற்று முன்தினம் வழங்கப்பட்டுள்ளது.*

*இதற்கான நிதியை திருகோணமலை கோணேஸ்வரா இந்துக்கல்லூரியின் 1987 ஆம் வருட பழைய மாணவர்கள் சார்பாக இரு பிரதேச செயலகப் பிரிவு செயலகத்தில் ஒப்படைக்கப்பட்டது.*

*அண்மையில் இதற்கான நடமாடும் சேவைகள் பிரதேச செயலகத்தால் நடாத்தப்பட்டது.*

*இதன்போது இருபிரிவுகளிலும் 500 இற்கும் அதிகமான வறியவர்கள் பத்திரங்கள் பதிவு இன்றி சிரமப்பட்டனர்.*

*இந்நிலையில் இதற்கான நிதியை பழைய மாணவர்களிடம் இளைஞர் அபிவிருத்தி அகம் கோரியதற்கிணங்க ஆவணங்களின் முக்கியத்துவம் கருதி பழைய மாணவர்கள் நிதியை வழங்கியிருந்தனர்.*

*இதனையடுத்து இந்த ஆவணங்களை மக்கள் முற்றிலும் இலவசமாக பெறும் வகையில் இந் நிதி திட்டமிடல் பிரிவினரிடம் கையளிக்கப்பட்டது.*


## மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மண மக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள 076 443 8619, 076 973 4611 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை – அதிகாலையும் மாலையும் – உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.


# திருகோணமலையில் புதையல் தோண்டிய ஐவர் கைது

*திருகோணமலை - உப்புவெளி காவல்துறை பிரிவுக்குட்பட்ட வில்கம் விகாரை காட்டுப்பகுதியில் புதையல் தோண்டிய குற்றச்சாட்டின் பேரில் ஐந்து சந்தேக நபர்களை நேற்றிரவு கைது செய்துள்ளதாக உப்புவெளி காவல்துறையினர் தெரிவித்தனர்.*

*இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் திருகோணமலை - கண்டி வீதி ஐந்தாம் கட்டை பகுதியில் வசித்து வரும் உபுல் புஸ்பகுமார தெல்கொட ( 52 வயது) மற்றும் ஹேமந்த விஜய சிங்க (44 வயது), அனுராதபுரம் - ருக்கஹவில பகுதியில் வசித்து வரும் ராஜபக்ஷ முதியன்சலாகே பந்துல ராஜபக்ஷ (62 வயது), அனுராதபுரம் - தாவந்திபுர பகுதியைச் சேர்ந்த சமரக்கோன் முதலாகே ஜகத் சந்தன சமரக்கோன் (50 வயது) எனவும் காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.*

*திருகோணமலை வெல்கம் விகாரை காட்டுப்பகுதியில் புதையல் தோண்டுவதாக விசேட காவல்துறை அதிரடிப் படையினருக்குவழங்கப்பட்ட இரகசிய தகவலையடுத்து அங்கு விரைந்த, விசேட காவல் துறை அதிரடிப் படையினர் அலவாங்கு - மண்வெட்டி போன்றவற்றுடன் ஐந்து சந்தேக நபர்களை கைது செய்துள்ளதாகவும் காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.*

*கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை நாளை திருகோணமலை நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருவதாகவும் காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.*


## வேலையாட்கள் தேவை

சுன்னாகத்தில் இயங்கும் பிரபல உணவகமொன்றிற்கு கீழ்க்காணும் வேலையாட்கள் தேவை.

- றொட்டி, கிழங்கு றொட்டி, சமோசா, றோல்ஸ் தயாரிப்பவர்.
- இடியப்பம், புட்டு, தோசை தயாரிப்பவர்.
- சமையல் உதவியாளர்கள்.
- சுத்திகரிப்பு செய்பவர்கள்.



* ஆண், பெண் இருபாலரும் தொடர்புகொள்ளலாம்.
* வெளி மாவட்டத்தில் இருந்து வருபவர்களுக்கு தங்குமிடம் இலவசம்.

077 652 9583


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரீமியர் லீக் கால்பந்து தொடர்; மார்ச் மாத விருதுகள் அறிவிப்பு




இங்கிலாந்தில் நடைபெற்று வரும் பிரீமியர் லீக் கால்பந்து போட்டிகளில் மாதம்தோறும் சிறந்த வீரர், மேலாளர் மற்றும் சிறந்த கோல் அடித்த வீரர் ஆகிய விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன இந்நிலையில் தற்பொழுது மார்ச் மாதத்திற்கான விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

நடப்பு சீசன் தொடக்கத்திலிருந்து மாதத்தின் சிறந்த வீரர் மற்றும் சிறந்த மேலாளர் விருதுகளை வென்ற எவருடைய பெயரும் இந்த மாதத்தில் பரிந்துரைக்கப்படவில்லை. இந்த மாதம் புதிதாய் ஒரு வீரர் மற்றும் மேலாளர் ஆகியோர் இந்த விருதை வெல்லும் நிலை ஏற்பட்டது. அதைத்தொடர்ந்து பிரீமியர் லீகின் அதிகாரப்பூர்வமான வலைத்தளப் பக்கத்தில் இதற்கான வாக்கெடுப்பு நடைபெற்றது. உலகமெங்கும் உள்ள இரசிகர்கள் செலுத்திய வாக்குகளின் அடிப்படையில்வெற்றியாளர் யார் என்பது அறிவிக்கப்பட்டுள்ளது.

சிறந்த வீரருக்கான விருதுக்கு செல்சி அணியைச் சேர்ந்த தடுப்பு ஆட்டக்காரர் கிரிஸ்ட்டன்சன், டோட்டன்ஹாம் அணியின் நட்சத்திர வீரர் கேன், லெஸ்டர் சிட்டி அணியின் முன்கள வீரர் இகானாச்சோ, வெஸ்ட் ஹாம் அணியின் லின்கார்ட், லீட்ஸ் அணியின் கோல் காப்பாளர் மெய்லியர், மன்செஸ்டர் சிட்டி அணியின் மாரஸ், மன்செஸ்டர் யுனைடெட் அணியின் ஷா மற்றும் பிரைட்டன் அணியின் டிரோசார்ட் ஆகியோரின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டன.

இதில் மார்ச் மாதத்தில் ஆடிய 3 ஆட்டங்களில் 5 கோல்களை அடித்த லெஸ்டர் சிட்டி அணியின் முன்கள வீரரான இகானாச்சோவை ரசிகர்கள் வாக்களித்து மார்ச் மாதத்தின் சிறந்த வீரராக தேர்ந்தெடுத்துள்ளனர். லெஸ்டர் சிட்டி அணியின் முன்னணி வீரர்களான மடிசன் மற்றும் பார்ன்ஸ் ஆகியோருக்கு காயம் ஏற்பட்டதன் காரணமாக அணியின் முன்கள வீரராக சேர்க்கப்பட்ட இகானாச்சோ, பெீல்ட் அணிக்கு எதிரான ஆட்டத்தில் தனது முதல் ஹட்ரிக் கோலை பதிவு செய்தார்.

சிறந்த மேலாளருக்கான விருதுக்கு செல்சி அணியின் டுக்கல், லெஸ்டர் சிட்டி அணியின் ராட்ஜர்ஸ், பிரைட்டன் அணியின் பாட்டர் மற்றும் மன்செஸ்டர் யுனைடெட் அணியின் ஓலே ஆகியோரின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டிருந்தன. இதில் மார்ச் மாதத்தில் ஆடிய 3 ஆட்டங்களில் இரண்டு வெற்றிகள் ஒரு சமநிலை என அணியை சிறப்பாக வழிநடத்திய செல்சி அணியின் மேலாளர் டுக்கலுக்கு சிறந்த மேலாளருக்கான விருது வழங்கப்பட்டது. மார்ச் மாதத்தில் லிவர்பூல் மற்றும் எவர்டன் ஆகிய முன்னணி அணிகளுக்கு எதிராக வெற்றி பெற்றது இந்த விருதைப் பெற்றதற்கு மிக முக்கிய காரணமாக அமைகிறது.

இறுதியாக, மார்ச் மாதத்தில் அடிக்கப்பட்ட சிறந்த கோலுக்கான விருதை டோட்டன்ஹாம் அணியின் லமெலா வென்றார்.



# இலங்கை - மே.இ.தீவுகள் இரண்டாவது டெஸ்டும் சமநிலையில் நிறைவு!

இலங்கை - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையிலான இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியும் சமநிலையில் முடிவடைந்துள்ளது. இரு அணிகளுக்குமிடையிலான இரண்டு டெஸ்ட் போட்டிகளிலும் எந்தவொரு அணியும் வெற்றிபெறாத நிலையில் இந்தத் தொடரும் வெற்றி தோல்வியின்றி சமநிலையில் நிறைவடைந்துள்ளது.

அன்டிகுவா மைதானத்தில் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமான இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் களத்தடுப்பை மேற்கொள்ளத் தீர்மானித்தது.

முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட மேற்கிந்தியத் தீவுகள் அணி முதல் இன்னிங்ஸிற்காக 354 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது. இதனைத் தொடர்ந்து தனது முதல் இன்னிங்ஸில் இலங்கை அணி 258 ஓட்டங்களுக்கு சுருண்டது.

96 ஓட்டங்கள் முன்னிலையில் தனது இரண்டாவது இன்னிங்ஸ் ஆட்டத்தைத் தொடங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 4 விக்கெட்டுக்களை இழந்து 280 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது தனது இரண்டாவது இன்னிங்ஸை இடைநிறுத்திக் கொண்டது. இதனால் இலங்கை அணிக்கு 377 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.

அந்த வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய இலங்கை அணி போட்டியின் இறுதிநாளான நேற்று போட்டி நிறைவடையும்போது 2 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து 193 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதனால் போட்டி சமநிலையில் முடிவடைந்தது. திமுத் கருணாரட்ன 75 ஓட்டங்களையும் ஒசத பெர்னாண்டோ ஆட்டமிழக்காமல் 66 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். மேற்கிந்தியத் தீவுகள் அணியின் பந்துவீச்சில் அல்சார்ரி ஜோசப் மற்றும் கைல் மேயர்ஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டினை வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக பிரத்வைய்ட்டும் தொடரின் நாயகனாக சுரங்க லக்மாலும் தெரிவானார்கள்.

# ரொனால்டோவின் கைப்பட்டி 75ஆயிரம் டொலர்களுக்கு ஏலம்

கால்பந்தாட்ட உலகின் தற்போதைய நட்சத்திர வீரர்களில் ஒருவர் போர்த்துக்கல் அணியின் தலைவர் கிறிஸ்டியானோ ரொனால்டோ. அவரது அதிரடி ஆட்டம் காரணமாக உலகம் முழுவதும் இவருக்கு ஏராளமான ரசிகர்கள் உண்டு.

பெல்கிரேடில் அண்மையில் நடைபெற்ற கால்பந்து உலகக் கோப்பைக்கான தகுதிப் போட்டியில் செர்பிய அணிக்கு எதிராக போர்த்துக்கல் 2 - 2 என ஆட்டத்தை சமனில் முடித்தது. வெற்றிக்கான கோலை ரொனால்டோ அடித்தும் அது தகுதி நீக்கம் செய்யப்பட்டது. அதனால் விரக்தியடைந்த அவர் தனது கரத்தில் அணிந்திருந்த பட்டியை மைதானத்தில் வீசி எறிந்தார்.

அதனை எடுத்துக்கொண்ட மைதான ஊழியர் ஒருவர் தொண்டுநிறுவனம் ஒன்றிடம் கொடுத்துள்ளார். நீல நிறத்தில் இருக்கும் அந்த பட்டியில் ‘C’ என குறிப்பிடப்பட்டுள்ளது. அதனை அரிய வகை நோயினால் பாதிக்கப்பட்ட குழந்தையின் மருத்துவச் செலவுக்கு தேவைப்படும் நிதியை திரட்டும் விதமாக ஏலத்தில் விட்டுள்ளது அந்தத் தொண்டு நிறுவனம். அறக்கட்டளைக்கு நிதி திரட்டுவதற்காக மூன்று நாள்கள் இணையத்தில் நடைபெற்ற ஏலத்தில் ரசிகர் ஒருவர் 75,000 டொலர்களுக்கு அதனை வாங்கியுள்ளார்.




# முதல் ஒருநாள் போட்டியில் பாகிஸ்தான் இறுதிப்பந்தில் வெற்றி!

தென்னாபிரிக்க அணிக்கெதிரான முதலாவது ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தான் அணி 3 விக்கெட்டுக்ளால் வெற்றி பெற்றுள்ளது. இந்த வெற்றியின் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட தொடரில் 1 - 0 என்ற கணக்கில் பாகிஸ்தான் அணி முன்னிலை பெற்றுள்ளது.

செஞ்சூரியன் மைதானத்தில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணி முதலில் களத்தடுப்பை மேற்கொள்ளத் தீர்மானித்தது. முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட தென்னாபிரிக்க அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 273 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. வன் டெர் டஸென் 123 ஓட்டங்களையும் டேவிட் மில்லர் 50 ஓட்டங்களையும் எடுத்தனர். பாகிஸ்தான் அணியின் ஹீன் அப்ரிடி மற்றும் ஹரிஸ் ரவுப் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து 274 என்ற வெற்றி இலக்கை நோக்கிக் களமிறங்கிய பாகிஸ்தான் அணி 7 விக்கெட்டுக்களை இழந்த நிலையில் இறுதிப் பந்தில் வெற்றி இலக்கை அடைந்து 3 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது. அணித்தலைவர் பாபர் அசாம் 103 ஓட்டங்களையும் இமாம் உல் ஹக் 70 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். தென்னாபிரிக்க அணியின் பந்துவீச்சில் அன்ரிச் நோட்ஜே 4 விக்கெட்டுக்களையும் அன்டில் பெலுக்வாயோ 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். இப்போட்டியின் ஆட்டநாயகனாக பாபர் அசாம் தெரிவுசெய்யப்பட்டார்.

இரு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது ஒருநாள் போட்டி நாளை ஜோகன்னஸ்பேர்க் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்தவ தேவாலயங்களுக்கு அதி உச்சப் பாதுகாப்பு உயிர்த்தஞாயிறு நிகழ்வில் அச்சமின்றி பங்குபற்றலாம்

## இராணுவத் தளபதி உத்தரவாதம்

கொழும்பு, மார்ச் 03

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் ஆலோசனைக்கமைய தேவைக்கேற்ப பொருத்தமான பாதுகாப்பு நடவடிக்கைகள் கிறிஸ்தவ தேவாலயங்களில் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

எனவே கத்தோலிக்க மக்கள் அச்சமின்றி உயிர்த்த ஞாயிறு தின வழிபாடுகளில் கலந்து கொள்ள முடியும் என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தினத்தை முன்னிட்டு சகல கத்தோலிக்க தேவாலயங்களுக்கும் விசேட பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக வெளியாகியுள்ள செய்திகள் தொடர்பில் விளக்கமளிக்கும் போதே இராணுவத் தளபதி இதனைக் கூறினார்.

சகல கத்தோலிக்க தேவாலயங்களுக்கும் பாதுகாப்பு வழங்குமாறு ஆலோசனை வழங்கப்படவில்லை.

அது சிரமமான விடயமாகும். எனினும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரால் பாதுகாப்புசபையில் இந்த விடயம் தொடர்பில் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய தேவைக்கேற்ப பொருத்தமான பாதுகாப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. எனவே உயிர்த்த ஞாயிறு வழிபாடுகளில் அச்சமின்றி கலந்துகொள்ளுமாறு மக்களுக்கு அறியத்தருகின்றோம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# வாகன சாரதி அனுமதிப் பத்திரம் செல்லுபடியாகும் காலம் நீடிப்பு

காலாவதியாகியுள்ள சாரதி அனுமதிப்பத்திரங்கள் செல்லுபடியாகும் காலம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய இம்மாதம் முதலாம் திகதியுடன் காலாவதியாகியுள்ள சாரதி அனுமதிப் பத்திரங்களின் செல்லுபடியாகும் காலத்தை செப்டெம்பர் 30 ஆம் திகதி வரை நீடிக்க தீர்மானித்துள்ளதாக போக்குவரத்து திணைக்கள ஆணையாளர் நாயகம் சுமித் அலக கோன் தெரிவித்துள்ளார்.

கொவிட் வைரஸ் தொற்றின் காரணமாக சாரதி அனுமதிப் பத்திரம் உள்ளிட்ட ஆவணங்களை வழங்கும் செயற்பாடுகள் தடைப்பட்டிருந்தன. இதன் காரணமாக இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக போக்குவரத்து திணைக்கள ஆணையாளர் நாயகம் மேலும் தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்னரும் இவ்வாறு சாரதி அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடியாகும் காலம் நீடிக்கப்பட்டிருந்தது. எனினும் இந்தச் சந்தர்ப்பத்தின் பின்னர் அவ்வாறு நீடிப்பதற்கான தேவை ஏற்படாது என்றும், இதுவே கடைசி சந்தர்ப்பம் என்றும் போக்குவரத்து திணைக்களம் தெரிவித்துள்ளது.

# போலிக் குற்றச்சாட்டுக்களே அரசுமீது சுமத்தப்படுகின்றன

## பிரேம்நாத் தொலவத்த மறுப்பு

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தை பலவீனப்படுத்தும் வகையில் பொய்யான குற்றச்சாட்டுக்கள் பல முன்வைக்கப்பட்டுள்ளன.

எனினும் அரசாங்கத்தின் செயற்பாடுகளிலும் ஒரு சில குறைபாடுகள் காணப்படுகின்றன. அவற்றை நிவர்த்தி செய்து கொண்டு மக்களின் அபிலாஷைக்கு ஏற்ப செயற்படுதல் அவசியமாகும் என நாடாளுமன்ற உறுப்பினர் பிரேம்நாத் தொலவத்த தெரிவித்தார்.

கொழும்பில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் -

பொய்யான விடயங்களை உண்மையைப் போன்று வடிவமைக்கும் தன்மை சமூக வலைத்தளங்களுக்கு உண்டு. தற்போது சமூக வலைத்தளங்களில் வெளியாகும் செய்திகள் பொய்யானவையாகக் காணப்பட்டாலும் ஒரு சிலர் அதனை விரும்பி ஆராய்கிறார்கள். உண்மையைத் தோற் கடிக்கும் வலிமை சமூக வலைத்தளங்களில் வெளியாகும் போலியான செய்திகளுக்கு உண்டு.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தை பல வீனப்படுத்தும் வகையில் சமூக வலைத்தளங்களில் பல போலியான செய்திகள் வெளியாகின்றன. உணர்வுபூர்வமாக தாக்கம் ஏற்படுத்தும் போலியான செய்திகளை மக்கள் விரைவாக ஏற்றுக் கொள்கிறார்கள்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ 2015 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைவதற்கு பிரதான காரணிகளில் ஒன்றாக சமூக வலைத்தளங்களில் வெளியான செய்திகளைக் குறிப்பிட வேண்டும். பல்வேறு விமர்சனங்களுக்கு மத்தியில் நல்லாட்சி அரசாங்கம் தோற்றம் பெற்றது.

தற்போதைய அரசாங்கத்திலும் ஒரு சில குறைபாடுகள் காணப்படுகின்றன. குறைபாடுகளை நாட்டு மக்கள் சுட்டிக்காட்டியுள்ளார்கள். அவற்றை நிவர்த்தி செய்து கொள்ளவேண்டும். மக்களின் வெறுப்புக்கு மத்தியில் அரசாங்கம் செயற்பட்டால் எவ்வித பயனும் தோற்றம் பெறாது. ஆகவே தவறுகள் திருத்திக் கொள்ளப்படுவது கட்டாயமாகும். - என்றார்.

# இலங்கை மீது எந்த சக்திகளும் அழுத்தம் பிரயோகிக்க முடியாது

## ஜயநாத் கொலம்பகே இறுமாப்பு

சில மேற்குலக நாடுகள் தமது தனிப்பட்ட தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக மனித உரிமைகளை ஓர் ஆயுதமாகப் பயன்படுத்திக் கொள்கின்றன. தற்போதைய அரசாங்கம் ஆட்சியைக் கைப்பற்றும் சந்தர்ப்பங்களில் மாத்திரம் அதனை இலக்கு வைத்து அதற்கெதிரான நடவடிக்கைகள் சர்வதேசத்தில் முன்னெடுக்கப்படுகின்றன. எவ்வாறிருப்பினும் எந்தக் காரணியை அடிப்படையாகக் கொண்டும் இலங்கை மீது எவரும் அழுத்தம் பிரயோகிக்க முடியாது என்று வெளியுறவுகள் அமைச்சின் செயலாளர் ஜயநாத் கொலம்பகே தெரிவித்துள்ளார்.

இலங்கை தொடர்பில் சர்வதேச நாடுகளால் முன்வைக்கப்படுகின்ற பிரதான குற்றச்சாட்டுக்களான நல்லிணக்கம், பொறுப்புக் கூறல் மற்றும் காணாமல் போனோர் விவகாரம் உள்ளிட்டவற்றுக்கு வெகுவிரைவில் பதிலளிக்கப்படும் என்றும் செயலாளர் ஜயநாத் கொலம்பகே தெரிவித்துள்ளார்.

ஜேர்மன் ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலொன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அந்த நேர்காணலில் அவர் கூறிய விடயங்கள் சுருக்கமாக வருமாறு -

**ஐ.நா. விவகாரம்**

இலங்கையில் தற்போதும் மனித உரிமை மீறல்கள் இடம்பெறுகின்றனவா என்பதற்கான ஆதாரங்கள் உள்ளனவா? 2012, 2013, 2014 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளிலேயே இலங்கைக்கு எதிரான பிரேரணை ஐ.நாவில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. தற்போதைய அரசாங்கம் ஆட்சியைக் கைப்பற்றும் சந்தர்ப்பங்களில் மாத்திரம் அதனை இலக்கு வைத்து ஏன் இவ்வாறான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று ஐ.நாவிடம் கேள்வியெழுப்புகின்றோம். இலங்கைக்கு எதிராகக் கொண்டு வரப்பட்டுள்ள பிரேரணையில் கூறப்பட்டுள்ள விடயங்கள் தவறானவையாகும். இலங்கை மீது யாருக்கும் அழுத்தம் பிரயோகிக்க முடியாது.

**கொவிட் சடலம்**

கொவிட் தொற்றால் உயிரிழப்பவர்களின் சடலங்களை தகனம் செய்வதற்கு சுகாதார மற்றும் மருத்துவ ரீதியிலேயே தீர்மானம் எடுக்கப்பட்டது. பின்னர் அந்தத் தீர்மானத்தில் மாற்றம் ஏற்பட்டமையும் மருத்துவ ரீதியிலான காரணிகளின் அடிப்படையிலாகும். இவை அரசியல் ரீதியாக எடுக்கப்பட்ட தீர்மானங்கள் அல்ல. அதற்கமைய இதுவரையில் சுமார் 69 சடலங்கள் அடக்கம் செய்யப்பட்டுள்ளன. இந்த விவகாரத்தில் சில சமூகத்தினர் கவலையடைந்திருந்தமையை நாம் புரிந்து கொள்கின்றோம். அதற்கு எதிராக நாம் வாதாடவில்லை. எனினும் தற்போது அந்த தீர்மானத்தில் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளோம்.

**சிறுபான்மை மக்கள்**

சிங்கள பெரும்பான்மை வாக்குகளால் தான் தெரிவு செய்யப்பட்டிருந்தாலும் சகல இன மக்களுக்காகவும் செயற்படுவதாகவே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்திருந்தார். ஆனால் நீங்கள் ஒரு கருத்தை மாத்திரமே அடிப்படையாகக் கொண்டு விவாதிக்கிறீர்கள். நான் சகல மக்களுக்குமான ஜனாதிபதி என்றே அவர் தெரிவித்துள்ளார்.

**புனர்வாழ்வளிப்பதற்கான வர்த்தமானி அறிவித்தல்**

பயங்கரவாத தடைச்சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியது அத்தியாவசியமானது. 2015 - 2019 காலத்தில் காணப்பட்ட இரு கட்சிகளை பிரதானமாகக் கொண்ட தேசிய அரசாங்கம் இதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கவில்லை. உயிர்த்த ஞாயிறு தினத்தன்று மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களின் மூலம் நாம் சிறந்த பாடத்தைக் கற்றுக் கொண்டுள்ளோம். எதிர்வரும் சில வாரங்களில் உண்மையான பின்னணியை அறிந்து கொள்ள முடியும்.

**அரசியல் பழிவாங்கல் ஆணைக்குழு**

அரசியல் பழிவாங்கல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் செயற்பாடுகள் நீதிமன்ற நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளமையால் அது தொடர்பில் என்னால் கருத்து தெரிவிக்க முடியாது.

**காணாமல் போனோர் விவகாரம்**

2015 இல் இலங்கை அரசாங்கத்தால் இணை அனுசரணை வழங்கப்பட்ட 30/1 பிரேரணைக்கமைய காணாமல் போனோர் பற்றிய அலுவலகம் அமைக்கப்பட்டது. அதற்கமைய காணாமல் போனதாகக் கூறப்படும் நபர்கள் தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

காணாமல் போனதாகக் கூறப்படுபவர்களது உறவினர்கள் பொலிஸ் நிலையத்திலோ அல்லது ஜனாதிபதியிடமோ முறைப்பாடளிக்க முடியும். அவர்களால் முறைப்பாடளிக்கப்பட்டால் அதற்கேற்ப சட்ட நடவடிக்கை எடுக்கக் கூடியதாக இருக்கும். ஆனால் மனித உரிமைகளைப் பாதுகாப்பதாகக் கூறுபவர்கள் ஒரு சிலருடைய தேவைக்காக செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

காணாமல் போனோர், பொறுப்புக் கூறல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் ஆராய்வதற்கு 2009 - 2015 இற்கு இடைப்பட்ட காலத்தில் 3 ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டன. எனினும் 2015 ஆட்சி மாற்றத்தின் பின்னர் அவற்றின் செயற்பாடுகளைத் தொடர முடியாமல் போனது. எவ்வாறிருப்பினும் ஜனாதிபதியால் தற்போது மீண்டும் இது தொடர்பான ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது. உண்மைகளை வெளிப்படுத்துவதற்கு கால அவகாசம் வழங்கப்பட வேண்டும்.

**சர்வதேச நாடுகளின் தேவை**

சில நாடுகள் அவற்றின் தனிப்பட்ட தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக மனித உரிமைகளை ஓர் ஆயுதமாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றன. எனினும் எதிர்வரும் காலங்களில் இவ்வாறான செயற்பாடுகளுக்கு எதிராக நாம் பெருமளவான நாடுகளின் ஆதரவைப் பெற்றுக் கொள்வோம்.

2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது இம்முறை இலங்கைக்கு எதிரான வாக்குகளில் ஒன்று குறைவடைந்துள்ளது. 14 நாடுகள் வாக்களிப்பிலிருந்து விலகியிருந்தன. எனவே காலப்போக்கில் ஏனைய நாடுகளின் தீர்மானங்களிலும் மாற்றங்கள் ஏற்படும். எனவே வெகுவிரைவில் நல்லிணக்கம், காணாமல் போனோர் மற்றும் பொறுப்புக்கூறல் என்பவற்றுக்கான பதிலை வழங்குவோம்.

# பேலியகொட மேம்பாலத்தில் திடீரெனத் தீப்பற்றியது கார்

பேலியகொட மேம் பாலத்துக்கு அருகில் கார் ஒன்று தீக்கிரையாகியுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

பேலியகொட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கண்டி - கொழும்பு பிரதான வீதியில் நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் கார் ஒன்று தீக்கிரையாகியுள்ளதாகப் பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற தகவலுக்கமைய தீயணைப்புப் பணிகள் இடம்பெற்றன.



இதன்போது காரில் ஏற்பட்ட தீயைக் கட்டுபடுத்துவதற்காக தீயணைப்பு கருவிகளும் பயன்படுத்தப்பட்டிருந்தன. தீப்பரவல் காரணமாகக் குறித்த வீதியில் வாகன நெரிசலும் ஏற்பட்டிருந்ததுடன், இதன்போது எவருக்கும் பாதிப்பு ஏற்பட்டிருக்கவில்லை.

தீப் பரவல் தொடர்பான மேலதிக விசாரணைகளை பேலியகொட பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 03.04.2021இல் வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org